# வட கிழக்கு பருவ மழை- அறிக்கை

## உலகளாவிய வானிலை அம்சங்கள்:

அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் MJO (MADDEN-JULIAN-OSCILLATION) தென் கிழக்கு ஆசியா பகுதிகளில் நிலைகொண்டிருந்தது. **டிசம்பர் மாதத்தில்** தென் கிழக்கு ஆசியா பகுதிகளில் இருந்து கிழக்கு நோக்கி நகர்ந்து மேற்கு பசிபிக் பெருங்கடல் பகுதியில் நிலைகொண்டிருந்தது.

அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் ENSO (EL-NINO-SOUTHERN OSCILLATION) நடு நிலையில் (Neutral phase) இருந்தது. **டிசம்பர் மாதத்தில்** La-Nina **நிலையில் இருந்தது**.

அக்டோபர் மாதத்தில் IOD (INDIAN OCEAN DIPOLE) எதிர்மறையாகவும், நவம்பர், டிசம்பர் மாதங்களில் நடு நிலையிலும் மாதங்களில் இருந்தது.

## தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய கடல் பகுதிகளில் நிலவிய வானிலை அம்சங்கள்:

### அக்டோபர் 2021:

**காற்றழுத்த தாழ்வு பகுதி, வளிமண்டல சுழற்சி மற்றும் வெப்பச்சலனம் காரணமாக தமிழகத்தில் பரவலாக மிதமான மழையும், ஒருசில இடங்களில் கன முதல் மிக கன மழையும் மற்றும் ஒரிரு இடங்களில் அதி கன மழையும் பதிவானது**

**பாபநாசத்தில் (திருநெல்வேலி மாவட்டம்) அதி கன மழையாக 27 cm பதிவாகியது.**

**தமிழகம் மற்றும் புதுவையில் பதிவான மழை அளவு 228.6 mm, இயல்பான மழை அளவு 177.6 mm. இது இயல்பைவிட 29 சதவீதம் அதிகம்.**

தமிழகத்தில் பதிவான மழை அளவு 228.0 mm, இயல்பான மழை அளவு 177.2 mm. இது இயல்பைவிட 29 சதவீதம் அதிகம்.

புதுவையில் பதிவான மழை அளவு 366.2 mm, இயல்பான மழை அளவு 255.8 mm இது இயல்பைவிட 43 சதவீதம் அதிகம்.

மாவட்ட வாரியான அதிகபட்ச சராசரி மழை அளவாக 347.9 மில்லிமீட்டர் மழை கோயம்புத்தூர் மாவட்டத்தில் பதிவாகியது, குறைந்த பட்ச மழை அளவாக 111.1 மில்லிமீட்டர் மழை திருப்பத்தூர் மாவட்டத்தில் பதிவாகியது

## நவம்பர் 2021:

காற்றழுத்த தாழ்வு மண்டலங்கள், காற்றழுத்த தாழ்வு பகுதிகள், வளி மண்டல சுழற்சிகள் காரணமாக தமிழகத்தில் பரவலாக மிதமான மழையும், ஒருசில இடங்களில் கன முதல் மிக கன மழையும் மற்றும் ஓரிரு இடங்களில் அதி கன மழையும் பதிவானது.

நாகப்பட்டினம், திருப்பூண்டி (நாகப்பட்டினம் மாவட்டம்) மற்றும் காயல்பட்டினம் (தூத்துக்குடி மாவட்டம்) ஆகிய இடங்களில் அதி கன மழையாக 31 cm பதிவாகியது

தமிழகம் மற்றும் புதுவையில் பதிவான மழை அளவு 452.2 mm, இயல்பான மழை அளவு 179.5 mm. இது இயல்பைவிட 137 சதவீதம் அதிகம்.

தமிழகத்தில் பதிவான மழை அளவு 423.1 mm, இயல்பான மழை அளவு 178.8 mm. இது இயல்பைவிட 137 சதவீதம் அதிகம்.

புதுவையில் பதிவான மழை அளவு 1042.6 mm, இயல்பான மழை அளவு 401.4 mm இது இயல்பைவிட 160 சதவீதம் அதிகம்.

மாவட்ட வாரியான அதிகபட்ச சராசரி மழை அளவாக 935.0 மில்லிமீட்டர் மழை சென்னை மாவட்டத்தில் பதிவாகியது, குறைந்த பட்ச மழை அளவாக 186.4 மில்லிமீட்டர் மழை ஈரோடு மாவட்டத்தில் பதிவாகியது.

## டிசம்பர் 2021:

வளி மண்டல சுழற்சிகள் காரணமாக தமிழகத்தில் பரவலாக மிதமான மழையும், ஒருசில இடங்களில் கன முதல் மிக கன மழையும் மற்றும் ஓரிரு இடங்களில் அதி கன மழையும் பதிவானது.

**டிசம்பர் மாதத்தில் பதிவான அதிக பட்ச மழை அளவு (சென்டிமீட்டர்):**

**DGP அலுவலகம் (சென்னை மாவட்டம்) 24 cm.**

டிசம்பர் **மாதம் தமிழகம் மற்றும் புதுவையில் பதிவான சராசரி மழை அளவு 60.4 mm. இயல்பான மழை அளவு 92.6 mm (monthly mean). இது இயல்பைவிட 35 சதவீதம் குறைவு.**

டிசம்பர் **மாதம் தமிழகத்தில் பதிவான சராசரி மழை அளவு 60.4 mm. இயல்பான மழை அளவு 92.0 mm (monthly mean). இது இயல்பைவிட 34 சதவீதம் குறைவு.**

டிசம்பர் **மாதம் புதுவையில் பதிவான சராசரி மழை அளவு 72.0 mm, இயல்பான மழை அளவு 241.4 mm (monthly mean). இது இயல்பைவிட 70 சதவீதம் குறைவு.**

மாவட்ட வாரியான அதிகபட்ச சராசரி மழை அளவாக 210.2 மில்லிமீட்டர் மழை சென்னை மாவட்டத்தில் பதிவாகியது, குறைந்த பட்ச மழை அளவாக 19.1 மில்லிமீட்டர் மழை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பதிவாகியது

| மாவட்டம் | பதிவான மழை (மி.மீ) | இயல்பு மழை (மி.மீ) | வேறுபாடு (%) |
|---|---|---|---|
| அரியலூர் | 933.0 | 578.3 | 61 |
| செங்கல்பட்டு | 1238.4 | 702.6 | 76 |
| சென்னை | 1360.4 | 784.0 | 74 |
| கோயம்புத்தூர் | 678.6 | 343.8 | 97 |
| கடலூர் | 1184.7 | 704.6 | 68 |
| தர்மபுரி | 476.8 | 327.6 | 46 |
| திண்டுக்கல் | 588.6 | 470.2 | 25 |
| ஈரோடு | 521.9 | 308.4 | 69 |
| கள்ளக்குறிச்சி | 818.2 | 471.4 | 74 |
| காஞ்சிபுரம் | 995.2 | 591.4 | 68 |
| கன்னியாகுமரி | 1076.8 | 523.9 | 106 |
| காரைக்கால் | 1491.7 | 1032.5 | 44 |
| கரூர் | 496.7 | 309.7 | 60 |
| கிருஷ்ணகிரி | 442.0 | 289.8 | 53 |
| மதுரை | 484.6 | 418.8 | 16 |
| மயிலாடுதுறை | 1155.8 | 886.0 | 30 |
| நாகப்பட்டினம் | 1219.3 | 987.4 | 23 |
| நாமக்கல் | 531.6 | 293.2 | 81 |
| நீலகிரி | 635.0 | 477.2 | 33 |
| பெரம்பலூர் | 850.7 | 467.7 | 82 |
| புதுச்சேரி | 1491.4 | 882.0 | 69 |
| புதுக்கோட்டை | 629.3 | 410.5 | 53 |
| ராமநாதபுரம் | 593.2 | 523.1 | 13 |
| ராணிப்பேட்டை | 788.2 | 423.4 | 86 |
| சேலம் | 481.4 | 359.0 | 34 |
| சிவகங்கை | 661.1 | 423.7 | 56 |
| தஞ்சாவூர் | 717.9 | 448.6 | 60 |
| தேனி | 867.3 | 593.7 | 46 |
| தென்காசி | 596.1 | 363.9 | 64 |
| திருநெல்வேலி | 841.2 | 491.4 | 71 |
| திருப்பத்தூர் | 576.2 | 268.5 | 115 |
| திருப்பூர் | 480.9 | 318.4 | 51 |
| திருவள்ளூர் | 1058.2 | 639.1 | 66 |
| திருவண்ணாமலை | 837.6 | 460.0 | 82 |
| திருவாரூர் | 1030.0 | 742.1 | 39 |
| தூத்துக்குடி | 592.4 | 427.7 | 39 |
| திருச்சிராப்பள்ளி | 668.0 | 394.2 | 69 |
| வேலூர் | 626.2 | 389.8 | 61 |

| | | | |
|---|---|---|---|
| விழுப்புரம் | 1211.4 | 554.3 | 119 |
| விருதுநகர் | 525.2 | 395.2 | 33 |
| தமிழகம் | 711.6 | 448.0 | 59 |
| தமிழகம், புதுவை மற்றும் காரைக்கால் | 714.3 | 449.7 | 59 |

வடகிழக்கு பருவமழை காலத்தில் தமிழகம் மற்றும் புதுவையில் பதிவான சராசரி மழை அளவு 714.3 mm. இயல்பான மழை அளவு 449.7 mm (monthly mean). இது இயல்பைவிட 59 சதவீதம் அதிகம்.

தமிழகத்தில் பதிவான சராசரி மழை அளவு 711.6 mm. இயல்பான மழை அளவு 448.0 mm (monthly mean). இது இயல்பைவிட 59 சதவீதம் அதிகம்.

புதுவையில் பதிவான சராசரி மழை அளவு 1491.4 mm, இயல்பான மழை அளவு 882.0 mm (monthly mean). இது இயல்பைவிட 69 சதவீதம் அதிகம்.

வட கிழக்கு பருவ மழை காலத்தில் மாவட்ட வாரியான அதிகபட்ச சராசரி மழை அளவாக 1360.4 மில்லிமீட்டர் (Seasonal mean) மழை சென்னை மாவட்டத்தில் பதிவாகியது, குறைந்த பட்ச மழை அளவாக 442.0 மில்லிமீட்டர் மழை கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பதிவாகியது

**01.10.2021 TO 31.12.2021**




**நா. புவியரசன்,**
**அறிவியலாளர்**
**வானிலை ஆய்வு மையம்**
**சென்னை**